மூலமாகச் செய்யவேண்டும், பஞ்சாயத்து மூலமாகச் செலவு செய்யவேண்டும் என்பது பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றிய பெரிய விவாதம் நடந்தது. சரியாக செலவழிக்கப்படவில்லை என்பது ஒருசிலரின் கருத்து. இப்போது இருக்கக் கூடிய முறையிலேயே பணம் செலவழிக்கப்பட்டு வந்தால் வேலை நன்றாக நடக்கும் என்பது ஒரு சிலரின் கருத்து. இப்போது பஞ்சாயத்து யூனியனும் வந்திருக்கிற காரணத்தினால்—பெண்களைப் பொறுத்த வரையில், குழந்தைகளைப் பொறுத்த வரையில் அவர்களுக்கான திட்டங்களை பஞ்சாயத்து யூனியனின் கமிட்டி ஒன்றின் மூலம் நடைபெறச் செய்யவேண்டும் என்பது இப்போது இதுபற்றி நாம் செய்திருக்கிற முடிவு. பஞ்சாயத்து யூனியன் கமிட்டி டெவலப்மெண்ட் வேலைகளையும் எடுத்து நடத்தும்.

SRI M. K. SOMASUNDARAM : மத்திய சமூக நல போர்டைக் கலைத்துவிட்டு மாதர் நல இலாகா மூலமும், பஞ்சாயத்தின் மூலமும் செலவழிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் சொன்னேன். பஞ்சாயத்து யூனியன் ஏற்படுத்துகிற ஒரு கமிட்டியின் மூலம் இந்தத்திட்டம் நடத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Arrears of loans due to Government

* 1375. Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the outstanding arrears of loans due to the Government in each district up-to-date, under (1) takkavi loans, (2) industrial loans, (3) loans under Harijan Welfare, (4) loans under Co-operative Department and (5) Fisheries Department?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is laid on the table of the House.

SRI T. S. RAMASWAMI : May I know the reason why in the case of the Kanyakumari district, it has been stated 'NIL' in the paper placed on the table of the House under the heads 'Takkavi loans' and 'Loans under Harijan Welfare'. Is it because no application for loan had been made or no loans had actually been given?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry I do not have the details about it. There may be some differences in the allotment of loans under the various heads. If it is not found under one head, it may be found under some other head. Anyway, I would like to have notice to answer this question, Sir.

SRI N. MARUDACHALAM : இதுவரையிலும் தக்காவிக் கடன் கொடுத்துள்ளவர்களுக்கு அவர்கள் கடனைத் திருப்பிக்கொடுக்கக் கூடிய நிலையில் உள்ளார்களா என்று பார்த்து இல்லையானால் அந்தக் கடனைத் தள்ளிவிடுவது நலம் அல்லவா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தக்காவி லோன் விவசாயிகளுக்கு விவசாயச் செலவுகளுக்காகக் கொடுக்கப்படுகிறது. அதிலே சில சமயங்களில் பருவகாலம் தவறிப்போனாலோ, பூச்சிப்புழு விழுந்து விவசாயம் கெட்டுப் போனாலோ கடன் வசூலை ஒத்திப்போடுகிறோம். கடன் கொடுத்ததை வசூல் பண்ணாமல் வஜா பண்ணுவது என்றால் அப்புறம் யாரும் கொடுக்கிற கடனைத் திருப்பித் தரமாட்டார்கள்.

---

[a] Printed as Appendix II on page 838 infra.

24th August 1961]

SRI M. KALYANASUNDARAM : வடாற்காடு ஜில்லாவில் 20 லட்சம் ரூபாய் வசூலாகவேண்டிய தொகை பாக்கியாக இருக்கிறதே. வருவாய் அமைச்சர் அந்த ஜில்லாவைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் அந்தப் பணம் வசூல் செய்யப்படாமல் பாக்கியாக நிற்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வடாற்காடு பெரிய ஜில்லாக்களில் ஒன்று. அங்கேயுள்ள கஷ்டமான நிலைமையினால் பணம் வசூலாகாமல் இருக்கலாம். வருவாய் அமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் கூடிய சீக்கிரமே இதை வசூல் செய்துவிடுவார்கள் என்று நம்புகிறேன்.

Government Museum

* 1376 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri S. RANGANATHAH MUDALIAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is a section of Archaeology including Pre-History in the Madras Government Museum; and

(*b*) if so, the kind of co-ordination which exists between the various sections of the Museum with the corresponding departments in the Madras and Annamalai Universities?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is a separate section for Archaeology in the Government Museum, Madras. But Pre-History is dealt with in the Anthropology section of the Museum.

(*b*) A statement [a] is laid on the table of the House.

SRI K. VINAYAKAM : Sir, at present the archaeological findings like agricultural implements and numismatic coins found in Mohenjadaro and Harappa which is popularly known as the Indus Valley Culture or Dravidian Culture, are exhibited in large numbers in the Government of India Museum at Delhi and only a very few of them are in our Madras Museum. As those findings particularly refer to our Dravidian Culture, would the Government of Madras make arrangements to bring such of those implements and other things here so that they may be an eye-opener to some of those sectarians who are preaching this Dravida Nad business in South India?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member seems to be under the impression that Dravidian culture is only confined to the southern India. Dravidian culture is an all-India culture and therefore it is better that it is exhibited at Delhi.

SRI K. VINAYAKAM : I am afraid I did not make myself clear. These findings at Mohenjadaro and Harappa were generally found in Sind and the Punjab, not belonging to Dravidistan. These findings are eye-openers to the entire culture of India. That is why, I put the question : Why not arrangements be made

---

[a] Printed as Appendix III on page 839 infra.